திரு. கே. எஸ். கணபதி : உண்மையாக நடவடிக்கை தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஏனென்றால் நியாயமாக ஒவ்வொரு ஆண்டும் கணக்கிடும் முறையிலே தொடர்ந்து கணக்கிட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இந்தக் குழுவில் இருப்பவர்கள் யாரையும் எனக்குத்தெரியாது. இதனுடைய நிலைமைகள் எல்லாம் பத்திரிகைகளிலும் வெளி வந்தன. அதன் பிறகு நான் விசாரித்ததிலே, கிட்டத்தட்ட 50 ஆயிரம் ரூபாய்க்கான பொருள்கள் அந்த ஏலக்காரர்களுக்கு இலவசமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. விளக்கம் தரவேண்டியவர்கள் விளக்கம் தருவார்கள். அதற்கிடையிலே நாம் விளக்கம் தந்து விவரத்தைக் கெடுத்துவிடாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவை துணைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

(பிற்பகல் 4–30)

2. அறிவிப்புகள்.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1975–ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 3/1975) மற்றும் தமிழ்நாடு 1975–ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சடடமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள். தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1975) மற்றும் தமிழ்நாடு, 1975ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1975) பேரவையால் நிறைவேற்றப்பட்டு இவை அரசியல் அமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவுகள் என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன.

1975 ஏப்ரல் 19] *[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்]*

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக, கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்:—

1. தமிழ்நாடு, 1975ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1975).

2. தமிழ்நாடு, 1975ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1975).

3. 1975ஆம் ஆண்டு, சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1974).

3. கவன ஈர்ப்பு.

(1) புகுமுக வகுப்புத் தேர்வில் பௌதிக வினாத்தாள் தொடர்பான குறிப்புகளில் குழப்பம் குறித்து.

திரு ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

" மார்ச் 27 ஆம் நாளன்று நடைபெற்ற புகுமுக வகுப்புத் தேர்வின் போது, பௌதிக வினாத்தாள் தொடர்பான குறிப்புகளில் குழப்பம் ஏற்பட்டு, இந்தக் குழப்பம் காரணமாக மேற்படி தேர்வு எழுதிய மாணவர்கள் குறைந்தது 25 சதவீத அளவிலேனும் தங்களுக்குரிய பாட முறைக்கு அப்பாற்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க வேண்டி வந்தது காரணமாக ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து ".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, புகுமுக வகுப்புகளுக்கான தேர்வுகள் நடத்துவது பல்கலைக் கழகத்தின் பொறுப்பாகும். பல்கலைக் கழகக் கல்வி சம்பந்தமான பொருள்களில் அரசு தலையிடுவதில்லை.

இந்தக் கேள்வித்தாள்கள் சம்பந்தமான குழப்பம் சென்னைப் பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கிவரும் கல்லூரிகளில் மட்டுமே ஏற்பட்டுள்ளது. மதுரைப் பல்கலைக் கழக எல்லைக்குள் இயங்கும் கல்லூரிகளில் இந்தக் குழப்பம் ஏற்படவில்லை என்று பதிவாளர் தெரிவித்துள்ளார்.